கொண்டு வந்தால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்கிற உத்திரவாதத்தைப் பேரவைத் தலைவர் மூலமாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பின்னர் எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்ட வினா எண்கள் *305, 306* ஆகியவை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தற்போது எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வினா எண் *305*, திருமதி இரா. பண்டியம்மாள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

305–

உசிலம்பட்டி அரசுப் பொது மருத்துவமனைக்கு "அவசர ஊர்தி" வழங்குதல்.

***19343*—திருமதி இரா. பாண்டியம்மாள்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டியில் செயல்பட்டுவரும் அரசு பொது மருத்துவமனைக்கு "அவசர ஊர்தி" (Ambulance) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உசிலம்பட்டி அரசு பொது மருத்துவமனைக்கு ஒரு அவசர ஊர்தி *1991* ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

முற்பகல் *10-40*

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி பின்தங்கிய தொகுதி. பிற்பட்டோர் சமுதாய மக்கள் வாழ்கின்ற தொகுதி. மேலும் உசிலம்பட்டி வளர்கின்ற நகரம். ஏற்கனவே கூறியதுபோல அது தாலுக்கா மருத்துவமனை. சட்டப் பேரவைத் தலைவர் தொகுதியிலிருந்து அங்கு மக்கள்

1994 ஏப்ரல் 20]

வருகிறார்கள். எனவே இங்கு அவசரமாக சீரியஸ் பேஷண்டுகளை எடுத்துச் செல்ல வேண்டுமானால் ஒரு ஆம்புலன்ஸ் வண்டி போதாததால் மற்றொரு வேன் கொடுத்திட அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய தொகுதி மக்கள் வராமல் இருக்க வேண்டும் என்றுதான் தனித் தாலுக்காவே பிரித்துக்கொண்டு போய்விட்டேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னபடி அநேகமாக அதற்கு தேவையிராது என்று கருதுகிறேன். தாலுக்கா பிரிக்கப் பட்டிருக்கிற காரணத்தினால் அவசியம் இருக்காது. இருந்தாலும் 50 படுக்கைகளுக்கு மேலே இருக்கின்ற மருத்துவமனைகளுக்கு 2 ஆம்புலன்ஸ் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே அந்த இலக்கீட்டிலே உங்களுக்கு நிச்சயமாக இன்னொரு ஆம்புலன்ஸ் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நிதிநிலைமையை பொறுத்துதான் கொடுக்க முடியும். இந்த ஆண்டிலே கிடைக்குமா என்று சொல்ல முடியாது. எதிர்காலத்திலே அது கிடைக்கும்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு எங்கள் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இந்த நிதி ஆண்டிலே எங்களுக்குக் கிடைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே சிரமமாக இருக்கும். நிதிநிலைமை வாய்ப்பு கொடுக்குமேயானால் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இல்லையென்றால் அடுத்த ஆண்டு அதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 306, திரு. தா. செழியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.